# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## PSC 2.12 – ELEMENTS OF PUBLIC ADMINISTRATION

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. பொதுத்துறை நிர்வாகத்தின் மூலக்கூறுகள் பாடம் தொடர்பில் பின்வருவனவற்றை விளக்குக.

(அ) பாடப்பரப்பும் அதன் உள்ளடக்கமும்

(ஆ) இதன் ஆய்வு நோக்கமும் முக்கியத்துவமும்.

(2 x 10 = 20 புள்ளிகள்)

02. "பொதுத்துறை நிர்வாகம் அரச நிர்வாகத்தை குறித்து நிற்பதாக இருந்தபோதிலும் இதன் ஆரம்ப நிலை, தோற்றம் குடும்பமாகவே இருந்திருக்கின்றது." ஆராய்க.

(20 புள்ளிகள்)

03. அரசியலில் இருந்து ஆட்சியியலை வேறுபடுத்திக் காட்டியவர்களின் வரிசையில் கீழ்வருபவர்களின் பங்களிப்புக்களை விளக்குக.

(அ) வுட்றோ வில்சன் - Woodrow Wilson (10 புள்ளிகள்)

(ஆ) வில்லேபி – Willabouyh (05 புள்ளிகள்)

(இ) உட்றோ (05 புள்ளிகள்)

04. பின்வருவனவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை அடையாளம் காண்க.

(அ) தனியார் நிர்வாகம் - பொதுத்துறை நிர்வாகம்

(ஆ) அரசியல் நிர்வாகம் - பொதுத்துறை நிர்வாகம்

(2 x 10 = 20 புள்ளிகள்)

05. (அ) ஒருங்கமைப்பு என்றால் என்ன? முறையான ஒழுங்கமைப்பு கோட்பாடு பற்றிய விளக்கத்தினை வரைபடம் மூலம் விளக்குக.

(ஆ) முறையான ஒழுங்கமைப்பு செயற்பாட்டுத் தன்மை பற்றி ஹேபட்சிமோன் (Herbert Simon) முன்வைத்த கருத்துக்கள் யாவை?

(2 x 10 = 20 புள்ளிகள்)

06. பொதுத்துறை நிர்வாகம் பின்வரும் விடயங்களில் வகிக்கும் முக்கிய பங்கினை ஆராய்க.

(அ) கொள்கை பற்றிய தீர்மானம்
(ஆ) கொள்கை அமுலாக்கம்

(2 x 10 = 20 புள்ளிகள்)

07. பின்வரும் கூற்றுக்கள் தொடர்பில் கருத்துரைக்குக.

(அ) "'போஸ்ட் - கோர்ப் (POSD CORB)' தத்துவத்தை சிறப்பாகக் கொண்ட நிர்வாகம் அதன் நோக்கத்தை வெற்றிகரமாக அடைந்து கொள்ளும்"

(ஆ) "ஒரு ஒழுங்கமைப்பில் தொழில்புரியும் ஊழியர்களின் ஆழுமையினால் நிர்வாகம் சிறப்படையும்"

(2 x 10 = 20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பெழுதுக.

(அ) நிர்வாகப் பன்முகப்படுத்தலும், இலங்கையில் அதன் நடைமுறையும்
(ஆ) இலத்திரனியல் அரசாங்கம் (e-government)
(இ) புதிய பொதுத்துறை முகாமைத்துவம் (New Public Management)
(ஈ) பொதுத்துறை நிர்வாகம் பற்றிய முறைமை அணுகுமுறை

(2 x 10 = 20 புள்ளிகள்)

***